## 28.20 உயர்நிலைக்குழு அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மன்றங்களை அமைத்தல்

ஊரக வளர்ச்சி (தி 2) துறை

அரசாணை (நிலை) எண் 237 நாள் : 04.11.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண 320 ஊரக வளர்ச்சி துறை நாள் 11.11.97.
2. அரசு ஆணை (நிலை) எண 78 ஊரக வளர்ச்சி துறை நாள் 28.04.98.

**ஆணை**

இந்திய அரசியலமைப்பு சட்டம் அட்டவணை II–ல் மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருள்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் (சிறுபாசனம், சிறுகாடுகள் மற்றம் வன உற்பத்திப் பொருட்கள் பாதுகாப்பு ஆகிவற்றை தவிர) பிற இனங்கள் மீது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன, மேலும், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு உயர்நிலைக் குழு அமைத்து பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக் கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன உயர்நிலைக்குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.01.99 அன்று சமாப்பித்தது.

2. உயர்நிலைக் குழுவின் அறிக்கையில் இயல் II–ல் உள்ள பரிந்துரை எண் 35 பின்வருமாறு.

**பரிந்துரை எண் 35**

மத்தியில் உள்ள தேசிய வளர்ச்சி குழுமம் போன்று மாநில அளவில் முதலமைச்சரை தலைவராகக் கொண்டும் சில சட்டமன்ற உறுப்பினர்கள், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள், மாநகரத் தந்தைகள், அமைச்சர்கள் முதுநிலை நிர்வாகத்தினர்கள் மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர்களையும் கொண்டு மாநில வளர்ச்சி குழுமம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

3.உயர்நிலைக் குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கபட்ட முடிவுக்கேற்ப உயர்நிலைக் குழுவின் அறிக்கை இயல்–2–ல் உள்ள பரிந்துரை எண் 35 மீது அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

1. மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகள் பற்றி கருத்து தெரிவிக்க (1) தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மன்றம் (2) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மன்றம் என்ற இரண்டு அமைப்புகள் அமைக்கப்படுகின்றன.
2. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மன்றம் கீழ்கண்டவாறு அமைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதலமைச்சர் | தலைவர் |
| திட்டம், நிதி, குடிநீர் வழங்கல், மற்றும் உள்ளாட்சித் துறைகளின் அமைச்சர்கள் | உறுப்பினர்கள் |
| ஊரக வளர்ச்சி தொடர்பான மாநில திட்டக் குழு உறுப்பினர் | உறுப்பினர் |
| மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்களிலிருந்து 6 சார்பாளர்கள் | உறுப்பினர்கள் |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிலிருந்து 6 சார்பாளர்கள் | உறுப்பினர்கள் |
| கிராம ஊராட்சிகளின் தலைவர்களிலிருந்து 6 சார்பாளர்கள் | உறுப்பினர்கள் |
| தலைமைச் செயலர் | உறுப்பினர் |
| ஊரக வளர்ச்சி துறை செயலர் | உறுப்பினர் செயலர் |

3) தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மன்றத்தின் செயல்பாடுகள்

(அ) ஊரக வளர்ச்சியின் கொள்கைப் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்தல்

(ஆ) உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான கொள்கை முடிவுகளைப் பற்றி விவாதித்தல்.

(இ) அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றியும் சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களின் செயல்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்தல்.

(ஈ) வளர்ச்சி தொடர்பான பிரச்சனைகள், செய்திகள், பொருட்கள் பற்றி மன்ற உறுப்பினர்கள், மன்றத் தலைவரின் அனுமதி பெற்று விவாதித்தல்.

4) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மன்றம் கீழ்கண்டவாறு அமைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதலமைச்சர் | தலைவர் |
| திட்டம், நிதி, உள்ளாட்சித் துறை, குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர்புற வளர்ச்சி மற்றும் குடிசை மாற்று துறைகளின் அமைச்சர்கள் | உறுப்பினர்கள் |
| நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான மாநில திட்டக் குழு உறுப்பினர் | உறுப்பினர் |
| அனைத்து மாநகராட்சித் தந்தையர் | உறுப்பினர்கள் |
| நகராட்சித் தலைவர்களிலிருந்து 6 சார்பாளர்கள் | உறுப்பினர்கள் |
| பேரூராட்சிகளின் தலைவர்களிலிருந்து 6 சார்பாளர்கள் | உறுப்பினர்கள் |
| தலைமைச் செயலர் | உறுப்பினர் |
| நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் | உறுப்பினர்–செயலர் |

5) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மன்றத்தின் செயற்பாடுகள்:–

(அ) நகர்ப்புற வளர்ச்சியில் கொள்கைப் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்தல்.

(ஆ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான கொள்கை முடிவுகளைப் பற்றி விவாதித்தல்.

(இ) அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றியும், சமூக, பொருளாதார முன்னேற்றத் திட்டங்களின் செயல்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்தல்.

(ஈ) வளர்ச்சி தொடர்பான பிரச்சினைகள், செய்திகள், பொருட்கள் பற்றி மன்ற உறுப்பினர்கள், மன்றத் தலைவரின் அனுமதி பெற்று விவாதித்தல்.

6) மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றின் தலைவர்களிலிருந்து சார்பாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நியமிக்கப்படுவர். இந்தச் சார்பாளர்களின் பதவிக் காலம், அவர்களுடைய நியமன நாளிலிருந்து 2 ஆண்டுகளாக இருக்கும்.

7) அலுவல் சாராத உறுப்பினர்களின் பயணப்படி, அகவிலைப்படி, போன்ற பிற படிப் பணத்தைப் பொறுத்த வரையில், இரு குழுக்களுக்கும் முதன்மை நிலைக் குழு அந்தஸ்து வழங்கப்படும். இந்த குழு தொடர்பான செலவுகள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சிக் குழுவின் செலவுகள், ஊரக வளர்ச்சித் துறையினாலும், நகர்ப்புற வளர்ச்சிக் குழுவின் செலவுகள், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

8) தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மன்றத்தின் அனைத்து பணிகளை ஊரக வளர்ச்சித் துறையும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மன்றத்தின் அனைத்து பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையும் மேற்கொள்ளும்.

4) இவ்வரசாணை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அ.சா,எண். ந.நி(ம)கு.வ/செயலர்/99 நாள் 01.11.99–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்